உ
சிவமயம்



கலைநகர் வட்டு. வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி வடிவேலு திலகவதியம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# திலக தீபம்

## நினைவு அமுதம்

**27.02.2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கலைநகர் வட்டு. வடக்கு,
சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திருமதி வடிவேலு திலகவதியம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# திலக தீபம்

## நினைவு அமுதம்

## 27.02.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

நாளும் பொழுதும் எம்நலம் பேணி
இல்லற வாழ்வை இனிதே நடத்தி
இனிய நல் அறிவு கூறி
எல்லோர் மனதிலும் இடங்கொண்டு
வாழும் வழிவகைகளை வளமாகச் சொல்லிய தெய்வமே
அன்பே ஆருயிரே அரியநல் ஆரமுதே
அணிவிளக்கே அரும்பொருளே
நன்மை நாடி நின்ற எங்கள் நாயகியே
மனிதருள் மாணிக்கமாய் மலரில் நறுமணமாய்
மங்கா மணிக் குன்றாய் இன்சொல் பேசி
எல்லோர் இதயத்திலும் குடிகொண்டு
பண்பில் பகவதியாய் பார்போற்றும் பனிமதியாய் வாழ்ந்து
புன்னகை தவழும் பொலிவு கொள்
வதனத்தை பொழுதும் காட்டி
இன்னல் அகற்றி வாழ்ந்த எங்கள் இதய ஒலியே
காலத்தில் காணாத காவிய நாயகியின்
காலடியில் இம்மலரை வைத்தோம்.
ஆற்ற முடியாத பெரும் சோகக் கடலில்
அவதியுறும் எமக்கு ஆறுதல் தருவதற்கு
அன்பு முகம் காட்ட நீரே வாரும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின்
மடியில்

18 - 02 - 1927

ஆண்டவனின்
அடியில்

28 - 01 - 2008



அமரர்

## திருமதி. வடிவேலு திலகவதியம்மா

### திதி நிர்ணயம்

ஆண்டுசர் வசித்தின் அணிதை அபரபக்கம்
பூண்ட சட்டிசேர் பொன்நாளில் – ஆண்ட
தில்லை நாதனின் திருவடியைச் சேர்ந்தாள்
திலகவதி யம்மாவெனச் சாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே நம்பனே திகைத்திட்டேனே.

## திருவாசகம்

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தானே புத்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கி நம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

## திருவிசைப்பா

கடுவினைப் பாசக்கடல் கடைந்தவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியினை யிரண்டு மடையு மாறடைந்தே
னருள்செய் வாயருள் செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலை விளக்கலகில் சாலேகம்
புடை கிடந்திலங்கு மாவன வீதிப்
பூவனம் கோயில் கொண்டாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்த நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

---

## சிந்தனைத் துளிகள்

- சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.
- இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒருநாளும் எண்ணாதே.
- வாயை மூடி வைத்திருங்கள். கண்ணைத் திறந்து வைத்திருங்கள்.
- நீ வாழ்க்கையில் உயரும் போது மனிதர்களிடம் சுமுகமாக இரு ஏனென்றால் நீ கீழே இறங்கி வரும் போது அவர்களைச் சந்திப்பாய்.
- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதைத் தேடிச் செல்.

## வைரவப் பெருமானின் பெயர்கள்

முத்தனே குமரன் பிள்ளை முடுவல் வெம்படையோன் காரி
சித்தன் கேத்திரபாலன் செந்தாடைக்குரிய கோமான்
வித்தகன் ஞாளியூர்தி விறற் கருங் குதிரை யாளி
வைத்த சீர்வடுகன் இன்ன வைரவன் நாமமாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெருநல் உளன்ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

# திருமதி வடிவேலு திலகவதியம்மா

அவர்கள்

## சிவபதமடைந்தமை குறித்த இரங்கற்பா

திருவருள் சிறந்த திரையுறு ஈழம்
பருதியந் தேவன் பாய்கதிர் பரப்பத்
அருங்கலை வல்லோர் அமைந்து ஏற்ற
உருபெற போற்ற உலகினர் உவப்ப
மலிவளம் சொரிய மலர்வது யாழகம்
அன்னதன் முத்தாய் அமைவது வட்டூர்
தொன்மை கொள் தூயதன் பதியிடை
கலைநகர் என்பது கவினுறு சோலை
சிலைதரு வல்ல சிற்பிகள் நிறைய
ஆடற் புரவி ஆடவர் குழுவும்
நாடக மேதை நடன குலாமும்
கம்பம் புலோ கேத்திர பாலன்
நம்பன் அருள் நாளும் பெற்றிட
முருகுப் பிள்ளை முன்னவன் அடியன்
அருமை செல்ல முத்தை அடைய
மங்கா மகள் மகா லட்சுமி
பங்கா சிறக்க பாலா மணியும்
திலக வதியம் மாவும் திகழ
கன்னல் மொழியாள் காரிகை திலகம்
அன்னம் எனவே அறிவாகி வாழ்
திருநாவுக் கரசு தேர்கிய சாலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவான உலகிடை உத்தமி ஆகிட
கீசகன் கூத்தில் கீர்த்தி பெற்று
பாட்டிசை தனியே பதமும் தவறாது
நாட்டி யமாடிய நடிகன் அவனும்
காட்டி யமான கண்ணகி அவளாம்
தெய்வ யானையை சீர்மகள் ஆக்கி
தவமணி யம்மா தளிராள் நாயகி
உவமை யில்லா உயர் வடிவேலு
இமயம் மாகிய இரத்தினம் அவனுமாக
வடிவேலு வற்றா வளத்தான் வனிதை
வடிவரசு திலக வதியம்மா வுடனாக
பண்புடை மகளாள் பகவதி யம்மா
அன்புரு வான அருளா னந்தம்
கன்னக் குழியாள் கனக ம்மா
செல்வக் கனியள் செல்வ ராணி
இல்லா இடையள் இராச லட்சுமி
காந்த விழியாள் காந்த ரூபி
புன்னகை யரசி புஸ்ப ராணி
குறைவில் மனதுடை கொடி மலர்
என்றிக் குலமணி களை தந்து
அபூர்வ நாத சிங்கம் அதிரச
நிரந்தர ரூபி நீதியான் நேரியன்
திருச் சிற்றம் பலம் நிறை
பத்ம நாத வாகனன் நேச
மகேந் திரம் மதியன் நித்தி
ஆனந்த ராஜா ஞான பூரணன்
தேனந்த மான உதய தாசன்
நன்மரு மக்களாய் பெற்றுச் சிறக்க
அன்பும் பண்பும் அகலாது இணைந்து
என்றும் இன்பாய் ஏற்ற மாகியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட செல்வம் அருந்தி மகிழ
இட்ட முடன் இணை மணவாளன்
இதயம் குளிர வாழ்ந்த திலகம்
மாமன் மாமி மைத்துனர் மருகியர்
ஏமமும் போற்ற இசைந்து இருந்து
திங்கட் சடைமுடிச் சிவனின் பாதமேற்றி
பங்கச் செல்வி பார்வதியைப் பணிந்து
சின்ன அம்மான் சேவடி துதித்து
பிராட்டி வளவு பெருமானைப் பாடிஇ
சுற்றத் தவரும் சூழ்ந்த உறவும்
நித்தம் மகிழ நிறைந்து இருந்து
முத்தம் ஒளிரும் முழுமதித் திலகம்
அச்சோ என்றே அலறிப் புலம்ப
அலை நடுவே அருங் கப்பலாக
மலை காலில்ல மானாகத் தவிக்க
உலை நடுவே உருகும் மெழுகாக
சிலை சிதைந்த கோவிலாக சென்றாள்
வித்தகன் பாதம் வேண்டிய தடைந்து
சித்த னொடு சேர்ந்தாள் திறனே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# தேற்றம்

**பிறந்தநல் லுயிர்கள் யாவும் பிரிந்திடல் இயற்கை**
**பிறப்பின் நிலையும் அதுவே**
**மறந்தரு மன்னர் வாழ்வும் மாநிலத் தழிதல் உண்மை**
**மக்கள் மாற்றமும் அதுவே.**
**நறுவளம் புகழ்வாழ்வு நிலையாமை புணர்ந்து நாமும்**
**நம்பனை ஏற்றுதல் முறையே**
**அறந்தனை ஒப்பி நாளும் அரன்பதம் ஏத்துவோமே**
**அவனருள் எண்ணியே வாழ்வோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி

சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி

பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி

புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

அங்கமலத் தயனோடு மாலுங் காணா

அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி

செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி

திருமூலட் டானனே போற்றி போற்றி

(அப்பர்)

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாக
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொணா விருந்துவரச் சர்ப்பம் தீண்ட
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள்வந்து தட்சணைகள் கொடுவென்றாரே

(விவேக சிந்தாமணி)

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ

அப்பனெத்தனை யெத்தனை அப்பனோ

பின்னை யெத்தனை யெத்தனை பெண்டீரோ

பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ

முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ

மூடனா யடியேனு மறிந்திலேன்

இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ

என்செய்வேன் கச்சியேகம்ப நாதனே

(பட்டினத்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவேன் உன்னருட் டுவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியே.

(தாயுமானவர்)

ஒருமையுடனின துதிருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமையெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டுமுனை
மறவாதிருக்க வேண்டும்.
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத் தில்வளர்
தலமோங்கு கந்தவேளே
சண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

(இராமலிங்கசுவாமி)

இன்னாது இழக்கப்படுதல் இரந்தவர்
இன்முகம் காணு மளவு.
ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(குறள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளுக்கும் போகத்துக்கும் பதவிக்கும் மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் சிந்துகின்றனர். கடவுளுக்காகவென்று யார் கண்ணீர் சிந்துகின்றனர். கடவுளை நாடி அருள் தாகமெடுத்துக் கனிந்து அழுகின்றவர்களுக்கு கடவுள் தம்மைக் காட்டியருள்கிறார்.

- ஸ்ரீ ராமகிருஷ்ணர் -

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது போற்றி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
அழுது கண்ணீர் விட்டாலும்
அபயம் அபயம் என்றாலும்
வழுவிப் பின்னால் ஏகியொரு
வார்த்தை மாற்றம் செய்திடுமோ

- உமர்கையாம் -

பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது
பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்குமே தெரியாது.

## பித்த வெடிப்பு நீங்க

- ☆ இலுப்பை எண்ணெய், வேம்ப எண்ணெய் பூசிவர பித்தவெடிப்பு நீங்கும்.
- ☆ சுண்டங்கத்தரி இலையை தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி வடித்துப் பூசினால் நீங்கும்
- ☆ நல்லெண்ணெயையும் மெழுகுதிரியையும் கலந்து வெடிப்புள்ள இடத்தில் பூச பித்தவெடிப்பு நீங்கும்.
- ☆ அரசமரப்பாலை பித்தவெடிப்பில் தடவினால் இந்நோய் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் புலம்பல்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

தந்தை தாய் பேண் – ஆத்திசூடி

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் என்ப நன்மக்கட்பேறு.

அன்னமிட்ட அம்மாவுக்கு அள்ளியரிசி இட்டேனே
ஐயகோ மனமது வேகுதே
கன்னமிட்ட கனிவுபோக குடமுடைத்து நின்றேனே
கலங்குதே சிந்தையும் காயுதே
முன்னட்ட உறவுமாழ கொள்ளியும் வைத்தேனே
முத்தான சொத்தையும் இழந்தேனே
சின்னமிட்ட சிருங்காரச்சீ மாட்டியைப் பிரிந்தேனே
செல்வமிழந் தேனிங்கு பாவியானேன்.

அரைத்த குழம்பும் ஆலங்காய் பிட்டும்
அம்மா நீ தந்தாய்
கரைத்த மோரும் கட்டித் தயிரும்
கண்ணே யென ஊட்டி
உரைத்த குறளின் உண்மை கூறி
ஓவிய மான பெட்டகமே
விரைத்த மனமோ விட்டு இருக்க
விரைந்து வாரும் பொன்னரசி.

மன்னவர் துயரங்கொள்ள மக்களும் வாட
பண்ணவர் போற்றிப்பாட பரிமளத்தை இழந்தோம்
கண்ணையும் இழந்தோம் கவினையும் இழந்தோம்
உன்னையும் அன்றியம்மா ஒருதுணை உண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மார் புலம்பல்

காவல்தானே பாவையர்க்கு அழகு
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை – கொன்றை வேந்தன்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின் – குறள்

தந்தையை இழந்த எம்மை தரணியில் பாதுகாத்து
தளராது வாழ வைத்து
சிந்தையைக் குளிரவைத்து சிறப்புகள் செய்ததாயே
சீர்மணிப் பூங் குன்றே
விந்தையே எம்மைவிட்டு விடரும் தொடர
வேதனிடம் சென்ற தேனோ!
பிந்தையே போலபதை பதைத்து வாடுவோர்
பனிமொழி கேட்ப தென்றோ.

கன்னலே தேனே கட்டிக் கரும்பே
கலையா கனிக் கொம்பே
நன்னல முத்தே நவநிதிப் பொருளே
நறுஞ் சுவைப் பாகே
பின்னல சடைமுடி பிரானார் வைரவனார்
பொன்னடி போற்றும் பொன்மலரே
இன்னல் தந்து இடியேறு வரவிட்டு
எங்குற் றிரெம் திலகமே.

| | | |
|---|---|---|
| பார்த்துக் கெட்டது | – | பிள்ளை |
| பார்க்காது கெட்டது | – | பயிர் |
| இட்டுக் கெட்டது | – | காது |
| இடாது கெட்டது | – | கண் |
| கேட்டுக் கெட்டது | – | குடும்பம் |
| கேளாது கெட்டது | – | கடன் |
| உண்டு கெட்டது | – | வயிறு |
| உண்ணாது கெட்டது | – | உணவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருஜி கிராம முன்னேற்றச் சங்கத்தின்

# இரங்கலுரை

வட்டு வடக்கு கலைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கீசகர் [கந்தையா] வடிவேலு அவர்களின் அன்பு மனைவியார் திலகவதியம்மா அவர்கள் 28.01.2008 காலமானதை இட்டு எமது கிராமமக்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளார்கள். இவர் ஒரு சிறந்த பண்பானர், தெய்வ பக்தி கொண்டவர்.

இவருடைய மகன் அருளானந்தம் அவர்கள் எமது சனசமூக நிலையத்திற்கும், கிராம முன்னேற்றச் சங்கத்திற்கும் சகல விதத்திலும் தன்னாலான பங்களிப்பைச் செய்து இச்சங்கங்களின் வளர்ச்சிப் பாதைக்கு உதவி புரிய வைத்த பெருந்தகையார் இவருடைய சேவைக்கு அம்மையார் உறுதுணையாக இருந்துள்ளார்.

இவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கம்பன்புலோ ஆதிவைரவப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி**

**நேருஜி கிராம முன்னேற்றச் சங்கமும்,**

**சனசமூக நிலையமும்.**

**கலைநகர்,**

**சித்தன்கேணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் சுவாமி

நாவலர் பெருமான் முதலாம் சைவ வினாவிடையில் சிவபெருமானின் திருக்குமாரர் யார் என்ற வினாவில் குறித்து விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என விடை எழுதி உள்ளார்.

எனவே வைரவக் கடவுள் சிவபிரானின் புதல்வர்களில் ஒருவர். சிவபிரானிலிருந்து பிரித்தெண்ண முடியாதவர். சிவனே வைரவக் கடவுள்.

ஐந்து சிரங்கள் கொண்ட பிரமன் அகந்தையால் சிவனை இகழ்ந்தார். அப்போது சிவபிரானின் மார்பிலிருந்து வைரவக் கடவுள் தோன்றினார். 5 தலைகளில் உச்சித் தலையைக் கிள்ளி பிரமனை நான்முகனாக்கி ஏனைய தேவர்களிடம் இரத்தப்பிச்சை ஏற்றார்.

வைரவருக்கு 64 திருவவதாரங்கள், பிரதானமாக 8 திருநிலையை நோக்கி அட்ட வைரவர் எனக்கூறுவர்.

- கயாசுரன் என்ற கொடியனின் செருக்கை அடக்க அவனை உரித்துப் போர்வையாகப் போர்த்தார். இதனால் கருநிறப் போர்வை உடையவர் ஆனார். ஆனால் வைரவர் செந்நிறமானவர்.
- பரஞ்சோதியார் வீட்டிற்கு சிவன் வைரவ வேடத்தில் சென்றார்.
- அருச்சுனனுக்கு பாசுபத அஸ்திரம் கொடுக்கும் நிலையில் வைரவர் வடிவில் சென்றார்.

நீல விழியும் கஸ்தூரிப் பொட்டும் நிர்வாணமுமாய்ச்
சூலாயுதத்துடன் நீ வருவாய் கற்றைத் துணியுடுத்து
கால பைரவறஞ்சனி கண்ட கருணை வைத்துப்
பாலவயசுடன் வருவாய் நீ சொர்ணவைரவனே **(வைரவ மாலை)**

கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையான்
அஞ்சுகம் மிளொன் றஞ்சுறுந் கிள்ளியே
மிஞ்சு கந்தொரும் மிக்குறுந் கார்நிறக்
கஞ்சுகன் பொற்கழலினை போற்றுவாம் **(திருச்செந்தூர் புராணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனில்லாத விடயங்கள்

ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாகத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன் குருசொற் கேளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை ஏழுந்தானே.

## பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க

(பதினாறு பிள்ளைகள் என்பது பொருத்தமற்றது)

துதிவாணி வீரம் விசயஞ் சந்தானம் துணிவு தனம்
அதிதானியஞ் சௌபாக்கியம் போக - வறிவழகு
புதிதாம் பெருமை யறங்குலநோ வகல் பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

| | | | |
|---|---|---|---|
| துதி | - புகழ் | அதிதானியம் | - அதிக தானியம் |
| வாணி | - கல்வி | சௌபாக்கியம் | - சிறந்த இன்பம் |
| வீரம் | - மனவுறுதி | போகம் | - நல்ல அறுபோகம் |
| விசயம் | - வெற்றி | அழகு | - பொலிவு |
| சந்தானம் | - மங்கட்பேறு | அறிவு | - ஞானம் |
| துணிவு | - தைரியம் | அறம் | - அறப்பண்பு |
| தனம் | - செல்வம் | குலம் | - நற்குடிப்பிறப்பு |

புதிதாம் பெருமை - புதிதாக வரும் சிறப்பு
நோகவல் பூண்வயது - நோயற்ற நீண்ட ஆயுள்

## ஔவையின் 4 கோடிப் பாடல்கள்

கோடி *I*

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.

கோடி *II*

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

கோடி *III*

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மொடு
கூடுதல் கோடி பெறும்.

கோடி *IV*

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்
கோணாமை கோடி பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# நன்றி நவிலல்



"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது"

எமது குடும்பத்தின் குலக்கொழுந்து
**"திலக தீபம்"**
திருமதி வடிவேலு திலகவதியம்மா
அவர்கள் ஆண்டவன் அடி சேர்ந்ததை அறிந்து
எமது அகம் தேடி ஓடி வந்து ஆறுதலும்,
தேறுதலும் கூறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும்
உறவுக்கப்பால் வந்து உதவிகள் புரிந்த
உத்தமர்கட்கும், தாக சாந்தி அளித்த
நேருஜி சனசமூக நிலையத்தினருக்கும், மலருக்கு
இரங்கலுரை தந்த நேருஜி கிராம முன்னேற்றச்
சங்கத்தினருக்கும், மலர் அஞ்சலி செய்த
திரு. செ. லிங்ககுரு, திரு. மு. அருட்பிரகாசம்,
திரு. பி. வைரவநாதன் ஆகியோருக்கும்,
இறுதிக்கிரியையிலும், வீட்டுக் கிருத்தியத்திலும் பங்கு
கொண்ட நல் உள்ளங்களுக்கும், கிரியைகளை
நடத்திய அந்தணப் பெருந்தகைகட்கும், இம்மலரை
ஆக்கிய மா. கணநாதன் அவர்கட்கும், அச்சிட்ட
**Computer World. Chankanai**
நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.




*பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி

**முருகுப்பிள்ளை + செல்லமுத்து**

- மகாலட்சுமி
- பாலாமணி
- திலகவதியம்மா
  - ம்
  - செல்வராணி + பத்மநாதவாகனன்
    - ன்
    - விஜிதா + சுகந்திரன்
    - தன்
    - ம்
    - உஷந்தினி + திலக்குமார்
      - ஜெஸ்மின்
    - கிருஸ்ணகாந்தன்
  - இராசலட்சுமி + மகேந்திரன்
    - சேந்தன்
    - கிருசாந்
    - விதுஷா
  - காந்தரூபி + நித்தியானந்தராஜா
    - ரதீசன்
    - விஜயானந்தி
  - புஸ்பராணி + ஞானபூரணன்
  - கொடிமலர் + உதயதாசன்
    - கஹிதாஸ்
    - ரசானி
    - குவேதா
    - சஜீதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறங்கூறாமை



- அறம் கூறான் அல்ல செயினும் ஒருவன்
  புறம் கூறான் என்றால் இனிது.

- அறன் அழிக்கு அல்லவை செய்தலின் தீதே
  புறன் அழீஇப் பொய்த்து நகை.

- புறம் கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்
  அறம் கூறும் ஆக்கம் தரும்.

- கண் நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
  முன்இன்று பின்நோக்கிச் சொல்.

- அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
  புன்மையால் காணப்படும்.

- பிறன் பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
  திறன்தெரிந்து கூறப்படும்

- பகச்சொல்லிக் கேளிர்ப் பிலிப்பார் நகைச்சொல்லி
  நட்பு ஆடல் தேற்றா தவர்.

- துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
  என்னைகொல் ஏதிலார் மாட்டு.

- அறன் நோக்கி ஆற்றும்கொல் வையம் புறன்நோக்கிப்
  புன்சொல் உரைப்பான் பொறை.

- ஏதிலார் குற்றம் போல் தம்குற்றம் காண்கிற்பின்
  தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

*Computer World. Chankanai. T.p- 0214591761, 0214591890.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org